## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.10.2017 | ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு - திருப்பலி | 02 |
| 02.10.2017 | தூய காவல் தூதர்கள் - திருப்பலி | 03 |
| 04.10.2017 | தூய பிரான்சிஸ் அசிசியார் விழா - திருப்பலி | 04 |
| 05.10.2017 | அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி - திருப்பலி | 06 |
| 07.10.2017 | புனித செபமாலை அன்னை திருவிழா - திருப்பலி | 08 |
| 08.10.2017 | ஆண்டின் பொதுக்காலம் 27ம் ஞாயிறு - திருப்பலி | 09 |
| 11.10.2017 | புனித திருத்தந்தை 23ம் யோவான் திருவிழா - திருப்பலி | 10 |
| 13.10.2017 | அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா- திருப்பலி | 11 |
| 15.10.2017 | ஆண்டின் பொதுக்காலம் 28ம் ஞாயிறு - திருப்பலி | 13 |
| 17.10.2017 | தூய அந்தியோக்கு இஞ்ஞாசியார் - திருப்பலி | 14 |
| 18.09.2017 | தூய லூக்கா நற்செய்தியாளர் திருவிழா - திருப்பலி | 15 |
| 22.10.2017 | ஆண்டின் பொதுக்காலம் 29ம் ஞாயிறு - திருப்பலி | 17 |
| 28.10.2017 | புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் திருவிழா - திருப்பலி | 18 |
| 29.10.2017 | ஆண்டின் பொதுக்காலம் 30ம் ஞாயிறு - திருப்பலி | 20 |


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. செபமாலை நமது ஜெயமாலை 21
2. அருளாளர் தொன் மைக்கேல் ரூவாவின் விசுவாச வாழ்வு 23
3. திருச்சபை செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.10.2017 ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

1 எசே. 18:25-28 II. பிலிப் 2:1-11 மத் 21: 28-32

அன்பார்ந்த இறைமக்களே, 26ம் ஞாயிறை இன்றைய தினம் சிறப்பிக்க திருஅவையானது அழைக்கிறது. நீதியையும், நேர்மையையும் கடைப்பிடிக்கும் மாந்தருக்கு எக்காலமும் அழிவில்லை. தாம் இழைத்த தவறின் பொருட்டு தன்னையே தாழ்த்தி உண்மையைக் கண்டுணர்ந்து குற்றங்களிலிருந்து விலகி நேர்மையைக் கடைப்பிடிப்போர் வாழ்வது உறுதி. சாவைக் கண்டு அவர் அஞ்சவேண்டியதில்லை. ஆண்டவரின் விண்ணரசில் இடம் உண்டு என்ற மையக்கருத்தை முதல் வாசகமும் இரண்டாம் வாசகமும் விளக்குகின்றன.

நற்செய்தியிலும் இதே கருத்து மையப்படுத்தப்படுகிறது. தீயவர்கள் ஒருபோதும் தீமையில் அழிய கடவுள் விரும்புவதில்லை. தீயவர்களும் தாங்கள் செல்லும் பாதையை உணர்ந்து நேர்வழியில் செல்வதையே இறைவன் விரும்புகிறார். இன்றைய நற்செய்தியில் காணும் இரண்டு புதல்வர்களும் பொய்தான் பேசினார்கள். "தன்நெஞ்சறிவது பொய்யற்க" என்றார் வள்ளுவர். "நீங்கள் பேசும்போது "ஆம்" என்றால் "ஆம்" எனவும் "இல்லை" என்றால் "இல்லை" எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடமிருந்து வருகிறது" (மத் 5:37) என்கிறார் இயேசு.

மூத்தவன், நான் தோட்டத்திற்கு போகவில்லை என்று கூறிவிட்டு, தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தோட்டத்திற்குச் சென்று வேலை செய்கிறான். ஆனால் இளையவனோ, போகிறேன் என்று கூறிவிட்டு போகாமல் இருந்துவிடுகிறான். இருவரும் பொய் பேசினாலும் மனம் மாறிய மூத்தமகன் போற்றுதலுக்குரியவன் ஆகிறான். ஆகவே மனித உருவில் தோன்றிய நம் மாபரன் இயேசு தன்னையேத் தாழ்த்தி, சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து எல்லோருக்கும் மேலாக தந்தையாகிய கடவுளின் பார்வையில் உயர்ந்ததை நினைவில் நிறுத்தி நம் குற்றங்களை உணர்ந்து மன்னிப்பு கேட்டு என்றும் நிலைத்திருக்கும் விண்ணரசில் இடம் பெற மன்றாடுவோம், இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே, உமது வழிச்செல்லும், திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் நீதியும், நேர்மையும், இயேசுவின் வழி என்பதைக் கண்டுணர்ந்து, அதன் வழியில் வாழத் தேவையான அருளையும், மனஉறுதியையும் அளிக்கும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிப்பின் நாயகனே, "எம் பாவங்கள் தானே உம்மைச் சிலுவைச் சாவுக்கு தள்ளின" என்பதனை மனப்பூர்வமாய் உணரக் கூடிய மக்களாக எங்களை மாற்ற வேண்டுமென்றும், எங்களைத் தாழ்த்திக் கொள்ளும் மனநிலையை அருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. விண்ணரசின் நாயகனே, பாவச் சூழலில் உழன்றுக்கொண்டிருக்கும் மக்களுக்காக மன்றாடுகிறோம். தங்களின் பாவநிலை அவர்களை எரிநரகத்திற்கு இட்டுச்செல்லும் என்பதை உணர்ந்து, இயேசுவின் அன்பு வழி ஒன்றே சிறந்த வழி என்பதை அறிந்து வாழும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமளிக்கும் மருத்துவரே, தமிழகமெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் டெங்கு என்னும் உயிர்கொல்லும் மர்ம காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இருக்கும் இக்காலச் சூழலில் பாதிப்புகள் இன்னும் அதிகமாக ஏற்படா வண்ணம் காத்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 02.10.2017 காவல்தூதர்கள் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

"காவல்தூதர்கள் துணையுடன் எச்செயலையும் தொடங்குவோம்"

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் காவல்தூதர்களின் விழாவினைக் கொண்டாட இங்குக் கூடியுள்ளோம். இவ்விழாவினைப் பொருளுணர்ந்து கொண்டாடும் வண்ணம் காவல் தூதர்களின் பணிகளை நினைவுப்படுத்திக்கொள்வோம். 1. இறைவனைப் போற்றுவது, 2. இறைவனின் வார்த்தைகளை அறிவிப்பது, 3. மனிதர்களை கண்காணிப்பது போன்ற பணிகளைச் செய்து வருவதாக நமது திருச்சபை கற்பிக்கின்றது. "நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி அவர்தம் தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" என திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார். காவல்தூதர்கள் கடவுளின் இரக்கத்தை, பராமரிப்பை, பாதுகாப்பை நமக்கு உணர்த்துபவர்களாக உள்ளார்கள். நம் ஒவ்வொருவருக்கும் ஒரு காவல் தூதர் கண்காணிப்பாளராக உள்ளார். எனவே, அவர்களின் பாதுகாப்பு நம்மோடு எப்பொழுதும் இருக்கவும், நமக்காக இறைவன் தந்துள்ள காவல்தூதருக்கு நன்றி கூறவும் இத்திருப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, எமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் ஆகிய அனைவரும் காவல்தூதர்களைப் போல மக்களை இறைவழியில் நடத்த வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இயக்கத்தின் தந்தையே இறைவா, எமது நாட்டை வழிநடத்தும் அனைத்துத் தலைவர்களையும் நீர் ஆசீர்வதித்து காவல்தூதர்களின் பராமரிப்பு, பாதுகாப்பு, இரக்கம் என்ற நற்பண்புகளைப் பின்பற்றி அவற்றின்மூலம் மக்களுக்கு நல்லாட்சி நல்கிட வேண்டி, உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பவரே எம் இறைவா, எம் பங்கில் உள்ள இளைஞர், இளம்பெண்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் தங்களது பெற்றோரைப் பாதுகாத்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து காவல்தூதர்களைப் போல பாதுகாப்பை அவர்களுக்கு அளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, பல்வேறு விதமான பிரச்சனைகளாலும், அவற்றால் பலதரப்பட்ட தீய பழக்கங்களுக்கும் ஆளாகியுள்ள உமது மக்களை நீர்தாமே கண்ணோக்கி உமது காவல்தூதரின் வழியாய் அவர்களின் வாழ்வை மாற்றத் தேவையான வரம் தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 04.10.2017 தூய பிரான்சிஸ் அசிசியார் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, நாம் அனைவருமே இயேசுவைப் பின்பற்ற அழைக்கப்பட்டுள்ளோம் என்பதுதான் இன்றைய நற்செய்தி வாசகத்தின் சாராம்சம். பல புனிதர்ளைத் தாய்த்திருச்சபை நமக்குத் தந்திருக்கிறது. அவர்கள் அனைவருமே நற்செய்தியின்படி, இயேசுவில் சிறப்பான வாழ்வை வாழ்ந்தவர்கள் என்பதை நமக்குச் சொல்கிறது. இப்படிக் கூட வாழ முடியுமா? என்று நாமே வியந்த புனிதர்களுள் இன்று நாம் கொண்டாடும் புனித பிரான்சிஸ் அசிசியார் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. இத்தாலியில் அசிசி நகரில் 1182ல், செல்வந்தரின் மகனாகப் பிறந்த பிரான்சிஸ், தான் வசதியானவர் என்பதை நடை, உடை, பாவனைகளில் எப்போதும் வெளிப்படுத்தினார். அதே சமயம் ஏழைகள் மீதும் கரிசனைக் கொண்டிருந்தார்.

பிரான்சிஸ் 1201ல் பெருஜியாவுக்கு எதிரான போரில் இராணுவ வீரராகக் களம் கண்டு கைதாகி, சிறையில் அடைக்கப்பட்டார். அங்குதான் அவரது ஆன்மீகப் பயணம் தொடங்கியது. ஓராண்டிற்குப் பிறகு விடுதலையானவர் கடுமையாக நோயுற்றார். அந்நேரத்திலும் ஆன்ம தேடல் அதிகமானது. 1205ல் இராணுவத்தில் சேரப் புறப்பட்டவர், தன் உள்ளுணர்வு ஏதோ உணர்த்தியதன் காரணத்தால் மீண்டும் அசிசி திரும்பினார். சுக போக வாழ்வைத் தவிர்த்தார். தனிமையை அதிகம் நாடினார். எப்போதும் செபித்தார். உரோமையில் ஆலய முற்றத்தில் பிச்சை எடுத்து ஏழைகளுக்குக் கொடுத்து உதவினார். ஆலயத்தில் செபித்துக் கொண்டிருக்கையில் இயேசு அவருக்குக் காட்சி கொடுத்து "என் ஆலயம் பழுதடைந்துள்ளது

நீ அதனைச் சரிசெய்" என்று கூறினார். அதனையும் செய்து முடித்தார். திருப்பலியில் குருவானவர் ஒருவர், "பயணத்திற்காக பையோ, இரண்டு அங்கிகளோ, மிதியடிகளோ, கைத்தடியோ எடுத்துக்கொண்டு போக வேண்டாம். ஏனெனில் வேலையாள் தம் உணவுக்கு உரிமை உடையவரே" என்னும் இறைவார்த்தையின் அடிப்படையில் மறையுரை நிகழ்த்தியதைக் கேட்ட பிரான்சிஸ் தெளிவு பெற்றார். அன்றுமுதல் அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடர ஆயத்தமானார். ஒரே ஆண்டில் 11 சீடர்கள் அவருடன் சேர்ந்தனர். அவர்களுக்கு நற்செய்தியைப் போதித்தார். அவர்களைக் கொண்டு துறவற சபையை உருவாக்கினார்.

பிறகு அசிசி நகரில் பிரான்சிஸ் நிகழ்த்திய மறையுரைகளைக் கேட்டு பின்தொடர்ந்த கிளாராம்மாள் துணையுடன் பெண்களுக்கான சபையையும், இல்லறத்தில் இருந்தே இறைப்பணியாற்ற மூன்றாம் சபையையும் ஆரம்பித்தார். தாழ்ச்சி என்ற புண்ணிய மணிமுடி சூடிய பிரான்சிஸ் நகரங்கள் தோறும் போதித்தார். 1223ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை மாட்டுக் கொட்டில் அமைத்துக் கொண்டாடினார். அதுமுதல் குடில் அமைக்கும் முறை வழக்கத்திற்கு வந்தது. அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவை பின்தொடர்ந்து ஏழையாக, எளிமையைப் போதித்து இயற்கையை நேசித்து வாழ்ந்த பிரான்சிஸ் 1226ம் ஆண்டு மறைந்தாலும் அவர் வாழ்ந்த வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு இன்றைய வாசகங்களுக்கேற்ப ஆண்டவர் மீது கொண்டுள்ள அன்பையும், அவரில் மகிழ்ச்சியையும் கண்டுகொள்ள தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் ஆகியோர் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும்,சோர்வுற்றோருக்குபலமாகவும்,வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எளிமையே உருவான இறைவா, ஏழ்மையைத் தன் அழைத்தலின் மையமாகக் கொண்டு வாழ்ந்த தூய பிரான்சிஸ் அசிசியாரைப்போல எமது நாட்டு தலைவர்கள், ஏழ்மையை மதித்து ஏழை எளிய மக்களுக்கு உதவி புரிந்து வாழும் நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தாழ்ச்சியின் வடிவமாக வாழ்ந்த தூய பிரான்சிஸ் அசிசியாரைப் போல எமது அன்றாட வாழ்வில் நாங்களும் தாழ்ச்சியோடும் பிறருக்கு உதவும் நல்மனதோடும் வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 05.10.2017 அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி திருப்பலி

**முன்னுரை** (சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்)

ஆல்பர்ட் மர்வெல்லி 1918ம் ஆண்டு மார்ச் 21ம் நாள் இத்தாலி நாட்டில் ஃபெராரா என்னும் ஊரில் பிறந்தார். இவர் தனது இளமைப் பருவத்தில் சலேசியர்களால் நடத்தப்பட்ட ஆரட்டரியிலும், கத்தோலிக்க இயக்கத்திலும் சேர்ந்தார். அங்குதான் இவர் தனது விசுவாசத்தில் முதிர்ச்சியைப் பெற்று தான் புனிதத்தை அடைய வேண்டும் என்று உறுதியான தீர்மானத்தை எடுத்தார். திருத்தந்தை வெளிப்படுத்திய இவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பிலிருந்து, "இவர் வலிமையும் உறுதியும் கொண்டு விளங்கினார். விளையாட்டுக்களை, குறிப்பாக மிதிவண்டி ஓட்டுவதை அதிகமாக விரும்பினார். மறைக்கல்வியைக் கற்றுக்கொடுத்து, திருத்தூதுப்பணி ஆர்வத்தை வெளிப்படுத்தினார். பிறரன்பைக் கடைப் பிடித்து, அமைதியாகக் காணப்பட்டார்" என அறிகிறோம். இத்தாலிய கத்தோலிக்க இயக்கத்தின் உறுப்பினராக இருந்து, புனித வாழ்வு வாழ்ந்து, அருளாளர் நிலையை அடைந்த பியர் ஜியார்ஜியோ பிரசாத்தி (1901-1925) என்பவரை இவர் தனது இளமைப்பருவத்தின் முன்மாதிரியாகத் தேர்ந்துக் கொண்டார்.

1941ம் ஆண்டில் மர்வெல்லி, பொறியியல் வல்லுநர் (Mechanical Engineering) படிப்பை முடித்தவுடன் இரண்டாம் உலகப்போரின்போது இராணுவத்தில் சேர்ந்தார். இராணுவத்திலிருந்து வெளி வந்தப்பிறகு சில ஆண்டுகளாக பியாட் என்னும் இத்தாலிய மோட்டார் வாகன (Automobile) தொழிற்சாலையில் வேலைச் செய்தார். இரண்டாம் உலகப்போரின்போது ஏழைகளுக்காகத் தன்னையே அர்ப்பணித்து கடினமாக உழைத்தார். போர் முடிந்த பிறகு தங்களுடைய நகரைப் புதுப்பிக்கும் பணியிலும் மும்முரமாகச் செயல்பட்டார். ஏழைகளுக்காகப் பணிபுரிந்த அந்நாட்களில் தன்னிடமிருந்த காலணிகளை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, வெறுங்காலோடு நடந்து பணி செய்தார். உயிருக்காகப் பயந்து ஒளிந்து கொண்டிருந்த அகதிகளைத் தனது மிதிவண்டியின் மூலம்தேடிச் சென்று அவர்களுக்கு உணவளித்து வந்தார்.

ஜெர்மானியர்கள் இத்தாலியை ஆக்கிரமித்தபோது, நாடு கடத்தப்படுவதிலிருந்து அநேக இளைஞர்களைப் பாதுகாத்தார். 1945ம் ஆண்டு செப்டம்பர் 23ம் நாள் தனது 26ம் வயதில் விடுதலை இயக்கத்தின் ஆலோசகராக செயல்பட்டு, மக்கள் தங்கி வாழ வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் பொறுப்பை ஏற்றார். இயேசு சொன்னது, செய்ததைப்போல், "பணிவிடை பெறுவதைவிட பணிவிடைப் புரிவதே சிறந்தது" என்பதனை இவர் தம் வாழ்வில் வாழ்ந்து காட்டினார். அரசியலில் மாற்றம் ஏற்பட்டபோது, அரசியல் வழியாக புதிய சமுதாயத்தை உருவாக்கலாம் என்றெண்ணிய மர்வெல்லி கிறிஸ்துவ குடியுரிமைக் கட்சியில் தம் பெயரைப் பதிவு செய்தார்.

1945ம் ஆண்டு ரிமினி மறைமாவட்ட ஆயர் இவரை கத்தோலிக்க நிபுணர்களை வழிநடத்தும்படி கேட்டுக்கொண்டார். இவர் தன்னுடைய அர்ப்பண வாழ்வை "கலாச்சாரம் மற்றும் பிறரன்பு" என்ற இரண்டே வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். இத்தாலிய கத்தோலிக்கப் பணியாளர்களின் இணை நிறுவனராக பணியாற்றியபோது கட்டுமானப் பணி செய்யும் பணியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கினார். இவர் நற்கருணையின்மீது ஆழ்ந்த பக்தி கொண்டு, அதன்மூலம் தனது மீட்புப் பணிக்கும், விடுதலைப்பணிக்கும் தேவையானச் சக்தியும் வல்லமையும் பெற்றார். இவர் 1946ம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் நடந்த தேர்தலின்போது வாக்களிக்க வாக்குச் சாவடிக்கு மிதிவண்டியில் சென்ற வழியில் இராணுவ வாகனம் மோத இயற்கை எய்தினார். விண்ணக வாழ்வை இவர் அடைந்தபோது வயது 28. இவரையும், இவருடன் கத்தோலிக்க இயக்கத்தில் பிறரன்புப் பணிபுரிந்து இறந்த வேறு இருவரையும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 2004ம் ஆண்டு செப்டம்பர் 5ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவருக்கு திருத்தந்தை "பிறரன்பின் பொறியியல் வல்லுநர்" என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கினார்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

**பதில்: ஆண்டவரே எம் வேண்டுதலைத் தயவாய்க் கேட்டருளும்.**

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் நல்லாயனாகிய கிறிஸ்து தங்களிடம் ஒப்படைத்த மந்தையை நன்றாகப் பராமரித்து பேணிக்காக்கவும், அவர்களுக்குத் தேவையான அனைத்து அருள் வரங்களையும் பொழிந்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இளையோரின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வரும் சலேசியர்களும், சலேசிய குடும்பத்தினரும், இளையோரைப் பிறரன்புப் பாதையில் வழிநடத்தி சமுதாய முன்னேற்றத்திற்காகப் பணிபுரிய அவர்களைத் தூண்ட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய நிலைகளில் உழைக்கும் அனைவரும் நீதியிலும், உண்மையிலும் வாழவும், இறையரசின் மதிப்பீடுகளின் அடிப்படையிலான சமூகத்தைக் கட்டியெழுப்பவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர், ஒடுக்கப்பட்டோர், உயிரிழந்தோர் அனைவரும் உமது அன்பையும் வல்லமையும் காணவும், உமது பராமரிப்பையும், தூண்டுதலையும் தங்கள் வாழ்வில் பெற்று அனுபவிக்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
5. இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தின் வழியாக அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லியை நினைவு கூறும் நாங்கள் அவரது

முன்மாதிரியால் தூண்டப்பெற்று பணிபெறுவதை விடுத்து, தாராளமுடன் பணிபுரியவும், விசுவாச வாழ்வுக்கேற்ற நற்செயல்கள் புரியவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 07.10.2017 தூய செபமாலை அன்னை திருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

"கத்தோலிக்க மக்களின் அடையாளம் செபமாலை"

இறை இயேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, அன்னை பாத்திமா காட்சியளித்த நூற்றாண்டு விழாவைத் திருச்சபை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. லூர்து நகரில் ஆறாம் காட்சியின்போது பாவிகளுக்காக செபமாலை செபிக்கும்படி மரியன்னை தம் ஆவலை வெளிப்படுத்தினார். பாத்திமா அன்னை காட்சியளித்தபோது உலக அமைதிக்காகவும், ரஷ்யா மனம் திருந்தவும் செபமாலைச் செபிக்கும்படி கேட்டுக்கொண்டார். லூர்து நகரில் காட்சியளித்தபோது செபமாலையைக் கையில் வைத்துக் கொண்டு, சிறுமி பெர்னதெத்துடன், அன்னையும் செபமாலைச் செபித்துக் கொண்டிருந்தார். மாதா வழியாக மகன் மாபரன் இயேசுவிடம் செல்ல, செபமாலையே கடைசி ஆயுதம் என்பதை இது காட்டுகிறது. அதனால்தான் மத, இன வேறுபாடின்றி தனிச் செபமாகவும், பொதுச் செபமாகவும், குடும்பச் செபமாகவும் அனைவராலும் இது செபிக்கப்படுகிறது. செபமாலையின் வல்லமை மகத்தானது.

1571ஆம் ஆண்டு அக்டோபர் 7ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று லெபாந்தோ போரில் துருக்கியர் தோற்கடிக்கப்பட்டார்கள். இப்போரினைத் தலைமைத் தாங்கிய திரு. டான் ஜீவன், "இம்மாபெரும் வெற்றிக்குக் காரணம் செபமாலைச் செபித்ததால்தான்" என்று உறுதியுடன் கூறினார். பாப்பரசர் 5ம் பத்திநாதர் இந்நாளினை "மரியா விக்டோரியா" வெற்றியின் அன்னை மரியா என்று பறைச்சாற்றினார். பாப்பரசர் 13ம் கிரகோரியார் இந்நாளை "செபமாலை அன்னை திருநாள்" என்று அறிவித்து செபித்ததன் மூலம் மற்றொரு போரில் வெற்றி கிடைத்தது. செபமாலை ஜெயத்தின் அடையாளம். மரியாவுடன் அமர்ந்து இயேசுவைத் தியானிக்கச் செய்யும் செபமாலையை ஒவ்வொரு நாளும் குடும்பமாய், இறை நம்பிக்கையில் வாழ்ந்து வளர, இறைவன் தந்த உறவில் வளர்ந்து கிறிஸ்துவை விசுவாச வாழ்வில் பிரதிபலிக்க செபிப்போம். நீதி, உண்மை, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம், இரக்கம் என்னும் இறையாட்சியின் மதிப்பீடுகளோடு, நம் விசுவாச வாழ்வை இணைத்து, பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. என்றென்றும் வாழும் அன்பு தெய்வமே, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர்கள், பொதுநிலையினர் அனைவரும், மக்கள் எங்கெல்லாம் தேவையில் ஏங்குகிறார்களோ, அங்கெல்லாம் உதவிக்கரம் நீட்டி, பொருளுதவி தந்து, பசிப்பிணி

போக்கும் உபகாரிகளாகச் செயல்பட்டு, திருச்சபையை வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. செபிப்போரை ஆசிர்வதிக்கும் இறைவா, எம் நாட்டுத் தலைவர்களின் உடல், உள்ள நலனுக்காகச் செபமாலையை ஒப்புக்கொடுத்து செபிக்கும் தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்று உணரவைத்த இறைவனே, நாங்கள் விசுவாசத்தில் நிலைத்து நின்று மரியாளைப்போல வாழவும், நித்திய வாழ்வைத் தரும் ஆவிக்குரிய வழியில் செல்லவும், வாழ்வில் ஏற்படும் வறுமை, பிணி, கடன் தொல்லைகளை அன்னையின் செபமாலை செபித்தே வெற்றிக்காணவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 08.10.2017 ஆண்டின் பொதுக்காலம் 27ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

I. எசா. 5:1-17 II. பிலிப் 4: 6-9 மத் 21: 33-43

"மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று, கடவுள் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று" ஒரு கவிஞர் ஒருவரின் அர்த்தமுள்ள வரிகள். "ஆயபெ "சழிழளநள புழன னளைிழளளநளள" ஓர் ஆங்கில அறிஞனின் ஆழ்ந்த சிந்தனைகள் இவை. இன்றைய உலகில் அனைத்து அநீதிகளும் அதன் உச்சத்தை அடைந்து விட்டன. இனியாராலும் யாரிடமும் நியாயத்தைப் பெற இயலாது. இந்நிலை தொடர்ந்தால் விவசாயி முதல் ஆளும் தலைவர்கள் வரை அனைவரும் இறைவனின் தண்டனைக்குள்ளாகப் போகிறோம் என்பதை முதல் வாசகம் விளக்குகின்றது. இறைவன் நமக்குக் கொடுத்துள்ள அனைத்து தாலந்துகளையும் நம் சுயநலத்திற்காக, நம் ஆடம்பர வாழ்க்கைக்காக மட்டுமே பயன்படுத்தி, இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பதை நிறைவேற்றாமல், அவர் நம்மிடம் கணக்குக் கேட்பார் என்பதையே ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் வாழ்பவர் பெறப்போகும் தண்டனையை நற்செய்திப் பகுதி கோடிட்டுக் காட்டுகின்றது. இறைவன் நமக்குத் தந்த வாழ்க்கை என்னும் கொடையால் உண்மையாகவும், கண்ணியமாகவும், தூய்மையாகவும், விரும்பத்தக்க வகையிலும் அனைவரும் பாராட்டும் வகையிலும் நற்பண்புடனும், நாம் வாழ்ந்து இறைவன் எதிர்பார்க்கும் இந்த நற்கனிகளை நாம் தர வேண்டுமென்று இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் அறிவுறுத்துகிறார். இறைவன் எதிர்பார்க்கும் நற்பலனைத் தருகின்ற மக்களாக வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. திராட்சைத் தோட்டத்தின் தலைவரே எம் இறைவா, இந்த உலகமாகிய திராட்சை தோட்டத்தை (திருச்சபையை) வழிநடத்திவரும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் மக்களை நல்வழியில்

நடத்தி உமது மீட்பில் பங்குகொள்ளும் மக்களாக அவர்களை உருவாக்கிடத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தங்கள் பொறுப்பை உதாசினப்படுத்தி தீயபழக்கங்களுக்கு அடிமையாகி, குடும்பத்தை வறுமையில் ஆழ்த்தும் தந்தைமார்களும், தொலைக்காட்சிக்கும், வீண் ஆடம்பரத்திற்கும் தங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவழித்து குடும்பத்தையும், குழந்தைகளையும் கவனியாமல் இருக்கும் தாய்மார்களும் இறுதி நாளில் ஆண்டவருக்குப் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்ந்து மனம் திருந்தி வாழ உமதருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இயற்கையின் தலைவனே இறைவா, எம் நாட்டு மக்களுக்காக மன்றாடுகிறோம். தண்ணீரில்லாமல் விவசாயிகள் துன்பப்படுகின்றனர். எல்லாப் பொருட்களின் விலைவாசி உயர்வால் சாதாரண மக்கள் துன்பப்படுகின்றனர். உமது இரக்கத்தால் எம் நாட்டின் இந்நிலை மாற, நாட்டை செழிக்கச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 11.10.2017 தூய திருத்தந்தை 23ம் யோவான் திருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் கொண்டாடும் புனிதரின் விழாவானது மிகச் சிறப்பான விழாவாகும். எவ்வாறெனில், நீங்களும் நானும் திருப்பலியில் வெறும் பார்வையாளர்களாக மட்டும் இருந்துவிட்டு போகாமல், பங்கு பெறுபவர்களாக மாறியதற்குக் காரணமான திருத்தந்தை புனித 23ம் யோவான் அவர்களின் நினைவு நாள் இது. இவருடைய இயற்பெயர் ஏஞ்சலோ கைசெப் தோன்கல்லி 1881 நவம்பர் 25 அன்று பிறந்தார். 1904ஆம் வருடம் குருத்துவ அருள்பொழிவு பெற்றார். முதல் உலகப்போரின்போது இத்தாலியப் படையில் ஏஞ்சலோ நியமனம் பெற்றார்.

மருத்துவ சேவையும் ஆன்மிக சேவையும் செய்து வந்தார். ஆயரானபோது "பணிவும் சமாதானமும்" என்ற விருதுவாக்கை எடுத்தார். பிரான்ஸ் நாடு வத்திக்கானுடன் நல்லுறவு பேணுவதற்கு வழி அமைத்தார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் இறந்ததும் 1958 அக்டோபர் அன்று புதிய திருத்தந்தையாகத் தேர்வு பெற்றார். தம் பெயரை 23ம் யோவான் என்று எடுத்துக்கொண்டார். போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், மருத்துவ மனையில் உள்ள நோயாளிகளையும் சந்தித்தார், சிறைச்சாலைக்குச் சென்றார். அங்கிருந்த கைதிகளிடம் "உங்களால் என்னிடம் வர இயலாது, எனவே நான் உங்களிடம் வந்திருக்கிறேன்" என்று கூறினார். இவரே கர்தினால்கள் குழுமியிருந்த அறையின் சன்னல் கதவுளைத் திறந்து விட்டு "மாற்றம் நிறைந்த காற்று திருச்சபைக்குள் வரட்டும்" என்று கூறினார். யூதர்களுடன் உறவை

சீரமைக்க முயற்சிகள் எடுத்தார். 1963ம் வருடம் ஜூன் 3ம் தேதி இறந்தார். திருத்தந்தை பிரான்சிஸ்2014ல் ஏப்ரல் 27 அன்று புனித நிலைக்கு உயர்த்தினார். எளிமையும் தாழ்ச்சியும், புதுமையும் நிறைந்த வாழ்வு வாழ்ந்த திருத்தந்தை 23ஆம் யோவானின் பண்புகளை, நாமும் கொள்வோம். திருச்சபைக்கு நமது கரங்களை விரித்துக் கொடுப்போம், ஏழை, எளிய மக்களை மன்னிக்கும் நல்லுள்ளம் கேட்டு இத்திருப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. மாற்றத்தை அருள்பவரே எம் இறைவா, தூய 23ம் யோவான் கூறியதுபோல் "மாற்றம் நிறைந்த காற்று திருச்சபையில் வரட்டும்" என்பதைப் போல் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் ஆகியோர் இக்காலக் கட்டத்திற்கேற்ப மக்களுக்குத் தேவையான மாற்றங்களைக் கொண்டு வந்து, திருச்சபையின் வளர்ச்சியை நோக்கிச் செல்ல வரமருளவேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

2. தேடி வருபவரே எம் இறைவா, "உங்களால் என்னிடம் வர இயலாது, எனவே நான் உங்களைத் தேடி வந்துள்ளேன்" என்று புனித 23ம் யோவான் சிறைக் கைதிகளுக்குக் கூறியதுபோல, இந்நாட்களிலும் சிறையிலுள்ள கைதிகளை உம் பாதம் சமர்ப்பிக்கிறோம். அவர்களுக்குத் தேவையான மனமாற்றத்தைத் தந்து நல்ல மனிதர்களாக மீண்டும் சமுதாயத்தில் வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. சமாதானத்தை அருள்பவரே எம் இறைவா, "பணிவும் சமாதானமும்" என்ற கொள்கையைக் கடைப்பிடித்து அதை வாழ்வாக வாழ்ந்த எம் புனிதர் 23ம் யோவான் போல எம் இளைஞர் இளம் பெண்கள் தங்கள் பெற்றோருக்கும், மூத்தவர்களுக்கும் கீழ்ப்படிந்து, சமுதாயத்திற்கும், திருச்சபைக்கும் சாட்சியுள்ள மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 13.10.2017 அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா திருப்பலி

**முன்னுரை** (சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்)

அலெக்சாண்டிரீனா 1904ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள ஓபோர்ட்டோ மாவட்டத்தில் பலசார் என்னும் ஊரில் அன்பும், ஊக்கமும் கொண்ட உழைப்பாளி குடும்பத்தில் பிறந்தார். இவர் தனது 14ம் வயதில் தனது கற்பைக் காத்துக்கொள்ள, மூன்று முரடர்கள் பிடியிலிருந்து விடுபட இரண்டாம் மாடியிலிருந்து சன்னல் வழியாக கீழே குதித்தார். அவ்வாறு விழுந்ததன் காரணமாக ஏற்பட்ட காயங்களினால் தாங்க முடியா துன்பத்திற்குள்ளாகி உடல் முழுவதும் பலவீனமடைந்து நடக்க இயலாமல் 30 ஆண்டுகளாக படுக்கையிலேயே வாழ்வை வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். தனது துன்பங்களையும், வேதனைகளையும் இறைவனுக்குப் பொறுமையோடு ஒப்புக்கொடுத்தார்.

இவர் 1938ம் ஆண்டு முதல் 1942ம் ஆண்டு வரை எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் இயேசுவின் பாடுகளில் பங்கு பெறும் பேற்றினைப் பெற்றார். உலக முழுமையும், மரியாளின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கும்படி திருத்தந்தை 12ம் பத்திநாதரை அணுகி இவர் பணிவோடு கேட்டுக்கொண்டார். அவருடைய விண்ணப்பத்திற்கிணங்க திருத்தந்தை 1942ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாள் உலக முழுமையும், மரியாளின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணித்தார். 1942ம் ஆண்டு மார்ச் 29ம் நாளிலிருந்து இறக்கும்வரை 13 ஆண்டுகளாக நற்கருணை மட்டும் உண்டு உயிர் வாழ்ந்தார். அருட்திரு உம்பர்த்தோ உதவியுடன் சலேசிய உடனுழைப்பாளராக மாறினார்.

இவர் தனது குறிப்பேட்டில் “சலேசிய உடனுழைப்பாளர் என்ற நிலையில் உலகிலுள்ள எல்லா சலேசியருடனும் இணைந்து எனது துன்பங்களை இளைஞர் பணிக்காக ஒப்புக்கொடுக்கிறேன். நான் சலேசிய சபையை அதிகமாக அன்புச் செய்கிறேன்”, என்று எழுதி வைத்திருந்தார். 1955ம் ஆண்டு அக்டோபர் 13ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். “மனிதரின் மீட்பே இறைவனின் மகிமை” என்ற இலக்கோடு தனது வாழ்வை அர்ப்பணித்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2004ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

1. தூய்மைக்கு இலக்கணமாக வாழ்ந்த அலெக்சாண்டிரீனா மரியாவைப்போன்று திருச்சபை, கிறிஸ்துவின் அன்பு நெறியிலும், ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையிலும் தூய உள்ளம் கொண்டு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இன்றைய இளைய தலைமுறையினர் அனைவரும் உண்மையான இறை நம்பிக்கையில் ஊன்றி வாழவும், இலட்சியத் துணிவோடு வாழ்வின் போராட்டங்களைச் சந்திக்கவும், நேர்மையான உள்ளத்தோடு பிறர் சேவையில் ஈடுபடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அருளாளர் அலெக்சாண்டிரீனா மரியாவைப் பின்பற்றி சலேசிய உடனுழைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப தூய உள்ளத்தோடும், அர்ப்பண உணர்வோடும், இவ்வுலகில் ஒளியாக நின்று, கிறிஸ்துவுக்காக முழுமனதோடு உழைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. நாங்கள் அனைவரும் இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கெடுப்பதன் வழியாக புனித வாழ்வுக்கு ஏற்றவர்களாகவும் நற்கனி தருபவர்களாகவும் வாழ்ந்து இறையாட்சிக்குச் சான்று பகர அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.10.2017 ஆண்டின் பொதுக்காலம் 28ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. எசா. 25: 6-10அ II. பிலிப் 4: 12-14,19-21 மத் 22: 1-14

"நீங்கள் அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள், இந்நிலையில் உறுதியாய் நிற்க முயற்சி செய்யுங்கள், இவ்வாறு செய்தால் ஒருபோதும் தடுமாற மாட்டீர்கள்" (1பேதுரு 1:10).

இறை இயேசுவில் இனியோரே, இறைவனின் அழைப்பும் அதற்கு நாம் கொடுக்கும் பதிலும் வாழ்வில் ஒருமுறை மட்டும் நிகழும் நிகழ்வன்று, மீண்டும் மீண்டும் நடைபெறும் நிகழ்வுகள். அருட்சாதனங்களின் வழியாக இறைவனின் அழைப்பும் நமது உடன்பாடும் மேலோங்கி நிற்கின்றது என்றாலும், ஒவ்வொரு நாளும் இறைவன் நம்மை பல்வேறு நற்செயல்களில் ஈடுபாடு கொள்வதற்கு நம்மை அழைத்துக்கொண்டே இருக்கின்றார். எப்படியெனில் சமுதாயத்தில் பல்வேறு சூழ்நிலைகளில் நீதியுடனும், அன்புடனும், உண்மையுடனும், கடமையுணர்வுடனும் நடந்துக் கொள்ள திருவழிபாடுகள், திவ்விய நற்கருணை விருந்தில் பங்கு கொள்ளுதல், விவிலிய வகுப்புகள் நடத்தல், மறைக்கல்வி கற்றுத்தருதல் போன்ற இறையாட்சியைச் சார்ந்த பல்வேறு அழைப்புகள் வந்துக்கொண்டே இருக்கின்றன.

இன்றைய நற்செய்தியில் இறையாட்சி என்பது திருமண விருந்தாக உருவகப்படுத்தப்படுகிறது. திருமண விருந்து ஒரு மகிழ்ச்சியானக் கொண்டாட்டம். இறைவன் இப்படிப்பட்ட மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கைக்குத் தான் நம் அனைவரையும் அழைக்கிறார். இறைவன் தரும் விருந்தில் பங்கேற்பவரது வாழ்வில் துன்பமிருக்காது, துயரமிருக்காது, கவலையும் கண்ணீரும் இருக்காது என்பதை முதல் வாசகத்தில் எசாயாவும் விளக்குகிறார். இந்த விருந்தினைச் சுவைப்போர் எதையும் செய்யும் ஆற்றல் பெறுவர் என்பதை இரண்டாம் வாசகத்தின் வழியாக அறிகிறோம். ஆக்கம் தரும் விருந்தை நற்செய்தியிலே இயேசு விண்ணரசுக்கு ஒப்பிடுகிறார். இந்த விருந்தில் பங்கு கொள்வோருக்கு நீதியும், மகிழ்ச்சியும், அமைதியும் பரிமாறப்படும். எனவே, இறைவன் தரும் நல்விருந்தைத் தேர்ந்தெடுத்து திருமுழுக்கின்போது கொடுக்கப்பட்ட வெண்ணிற ஆடையாகிய தூய்மை, நீதி, அன்பு, உண்மை போன்றவைகளைக் கறையின்றிக் காக்கும் வரம் வேண்டியும், அழைக்கப்பட்டவர்களாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டவர் களாகவும் வாழவும் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இவர்களும் உடல் உள்ள நலம் பெற்று, பிரச்சனைகளிலிருந்தும், சோதனைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு என்றும் உமக்கு சாட்சி பகரும் வாழ்க்கை வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தந்தையே இறைவா, எங்களுடைய நாட்டையும், சமுதாயத்தையும் வழிநடத்தும் தலைவர்கள் சுயநலத்தையும், அதிகாரத்தையும் மட்டுமே கடைப்பிடிக்காமல் உண்மையானக் கடமை உணர்வோடு மக்களின் தேவைகளை நிறைவேற்றவும், நாட்டில் அமைதி, மகிழ்ச்சி, ஒற்றுமையுணர்வை நிலைநாட்டவும் தேவையான திட்டங்களை வகுக்கப் போதுமான ஞானத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இயற்கையின் அதிபதியே இறைவா, இன்றைய நாட்களில் இயற்கையின் மாற்றத்தால்ஏற்படும்அழிவுகளைத்தடுத்துமக்களுக்கும்,மண்ணிற்கும், தாவரங்கள், விலங்குகளுக்கும் தேவையான நல்ல மழையும், தண்ணீர் வளமும், உணவும் கிடைக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நலன்களின் நாயகனே இறைவா, உம்முடைய வார்த்தைகளின் அர்த்தத்தையும், நீர் எங்களுக்குச் சொல்லும் அறிவுரைகளின் ஆழத்தைப் புரிந்துக்கொள்ளும் ஆற்றலையும் தூய ஆவியின் உதவியால் பெற்று, அதை எங்களின் வாழ்வில் செயல்படுத்தும் நல்ல உள்ளத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.10.2017 தூய அந்தியோக்கு இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறை இயேசுவில் வாழும் இனிய மக்களே, இன்றைய தினம் நாம் தூய அந்தியோக்கு இஞ்ஞாசியாரை நினைவில் கொண்டு சிறப்பிக்கிறோம். கி.பி. 35ம் ஆண்டு மார்ச் 15ம் நாள் சிரியா நகரில் பிறந்து இயேசுவின் சீடர் தூய யோவானின் சீடராக உருவானவர். கி.பி. 69ம் ஆண்டு நமது முதல் திருத்தந்தை தூய பேதுரு இவரின் மேன்மையை உணர்ந்து அந்தியோக்கியா நகரின் ஆயராக இவரை நியமித்தார். 40 வருட காலம் திருச்சபையின் போதனையைத் திறம்படப் போதித்து வந்தார். மன்னன் தொமிசஸ் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்களை வதைத்துக் கொல்லும் கொடிய நேரத்திலும் பயப்படாமல் வேதம் போதித்தவர். மன்னன் திராயன் ஆட்சிப் பீடம் ஏறிய நேரம் இவரை சிறையிலடைத்து, கைக்கு கைவிலங்கிட்டு அழைத்து "நீர் யார்?" என்று கேட்க, அதற்கு "புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்" இயேசுவாகிய ஆண்டவரை என்னுள் சுமப்பவன் என்று கூற "தியோடோஸ்" என்ற மரண தண்டனை அளித்தான்.

அதாவது மிருகங்களுக்கு இறையாக்குவது என்பது அதன் பொருள். பின் கப்பலில் ஏற்ற உரோமை கொலோசியன் அரங்கத்தில் அனைவரும் காணுமாறு இரண்டு சிங்கங்களுக்கு அவரை இறையாக்கினான். கப்பலில் சென்றபோது 7 மடல்கள் ஆசியா, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு எழுதினார். அதில் பல போதனைகள் இடம் பெற்றிருந்தன. குறிப்பாக, "நான் ஆண்டவரின் கோதுமை, மிருகங்களின் பற்களால் அரையப்பட்டு ஆண்டவரின் தூய அப்பமாக மாறுவேன்" என்று எழுதியிருந்தார்.

ஒரு மடலில் "நற்கருணை கிறிஸ்துவின் சதை, நிலை வாழ்வின் மருந்து" என்று குறிப்பிட்டிருந்தார். அந்தியோக்கியாவின் 2வது ஆயரான இவர் காலத்தில்தான் கத்தோலிக்கம் என்ற வார்த்தை வழக்கத்திற்கு வந்தது. இவரின் தூய சிந்தனையான "நமது உடல் கடவுளின் ஆலயம்" என்ற உயர்ந்த சிந்தனையைக் கொண்டு வாழ்ந்தார். இப்புனிதரின் விழாவைச் சிறப்பிக்கும் நாம் கிறிஸ்துவின் அன்பிற்கு நம்மையே அர்ப்பணிப்போம். நமது உடல் இறைவனின் ஆலயம் அதனைத் தூய்மையாகப் பேணிப் பராமரிக்கும் வரத்தை இத்திருப்பலியில் இறைஞ்சி மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. விசுவாசத்தின் சிகரமே இறைவா, எம்மை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகிய அனைவரும், இயேசுவின் பொருட்டு கொடிய மிருகங்களின் பற்களில் அரைப்பட நேர்ந்த புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் போன்று இக்கால கொடிய மிருகங்களாகிய லஞ்சம், ஏமாற்றம், அலைகழிப்பு, துரோகம் ஆகியவற்றின் கொடிய வேதனைகளால் துன்பப்பட நேர்ந்தாலும் இயேசுவின் அன்பு ஒருபோதும் அழியாது என்ற மனநிலையில் வாழ உம்மை மன்றாடுகிறோம்.
2. தாயும் தந்தையுமான இறைவா, இயேசுவின்மீது கொண்ட அளவில்லா அன்பின் காரணமாக அவரைத் தன் மனதில் சுமப்பவன் என்று பறைச்சாற்றிய புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் போன்று எத்துன்பம் வந்தாலும் உயிரையே இழக்க நேரிட்டாலும் நாங்களும் உம்மைச் சதா காலமும், நெஞ்சில் சுமக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. பரிசுத்தத்தின் இறைவா, "நான் ஆண்டவரின் கோதுமை, கொடிய மிருகங்களின் பற்களில் அரையப்பட்டு ஆண்டவரின் தூய அப்பமாக மாறுவேன்" என்றுரைத்த புனிதரைப்போன்று தீராத நோய், வறுமையின் கொடுமை, தனிமையில் வாடுதல் போன்ற எந்நிலையிலும் நாங்கள் தூயவர்களாக வாழ பரிசுத்த ஆலயமாக பிரதிபலிக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 18.10.2017 தூய லூக்கா நற்செய்தியாளர் திருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

"சேவையில் தன்னை அர்ப்பணிப்பவனே மனிதன் அவனே புனிதன்"

- நான்கு நற்செய்தியாளர்களில் அந்தியோக்கியாவைச் சேர்ந்த புறவினத்தார்.
- தூய லூக்கா மருத்துவம் தெரிந்தவர். சித்திரக் கலைஞரும் கூட.
- திருத்தூதர் பவுலோடு இணைந்து பணி செய்து, அன்புமிக்க மருத்துவர் லூக்கா என அவராலேயே புகழப்பெற்றவர்.

- ♠ இவரது நற்செய்தி கி.பி. 70-85க்குள் எழுதப்பட்டிருக்கலாம் என்பது கருத்து.
- ♠ இதனை மகிழ்ச்சியின் நற்செய்தி என்று அழைப்பதும் பொருந்தும்.
- ♠ இவரது நற்செய்தியை "இரக்கத்தின், ஏழைகளின், பெண்களின், செபத்தின் நற்செய்தி" எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- ♠ இறை இயேசு தான் தொடங்கவிருந்த ஒவ்வொரு செயலுக்கு முன்னும் இரவு, அதிகாலை தனிமையில் செபத்தில் கழித்தார் என்று எட்டு எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட்டுள்ளார்.
- ♠ மீட்பு என்பது எல்லா மக்களுக்குமானது என்பது இந்நற்செய்தியின் சாரம் ஆகும் (லூக் 7:2,1;14,21).

ஒரு உண்மையான சீடத்துவத்தின் சிறப்புத் தகுதிகளாக இறை வேண்டல், சான்று பகர்தல், பொறுப்புடன் செல்வத்தைப் பயன்படுத்துதல், அமைதி பெறுதல், சிலுவைச் சுமத்தல் இவையெல்லாம் இதில் அழுத்தம் பெறுகின்றன. இதுமட்டுமன்று திருத்தூதர் பணி நூலையும் எழுதியவர் இவரே. இறை இயேசுவை அறியாத புற இனத்தாருக்கு நாம் எப்போது எப்படி நற்செய்தியின் ஒளியை ஏந்திச் செல்லப் போகின்றோம்? இறை இயேசுவின் இரக்கப் பெருக்கினை உருக்குலைத்த இந்த உலகத்தின்மீது ஊற்றும் அருவியாக எம்மை மாற்றும் இறைவா என்று வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருஅவையும் அதில் பணிபுரியும் அனைவரும் இரக்கத்தின் கருவிகளாக மாறி ஒடுக்கப்பட்டோருக்கும், ஓரங்கட்டப்பட்டோருக்கும் புதுவாழ்வு அளிப்பவராக நாங்கள் வாழ எங்களை உமது அன்பினால் வழிநடத்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. மீட்பரான இறைவா, இழந்து போனதை மீட்கவே என்பதை தூய லூக்கா சுட்டிக்காட்டுகிறார். அடக்கு முறைகளால் உரிமை இழந்து போனவர்களும், குற்றம் செய்தவர்களும் மனமாற்றம் பெற்றால் இறைவனின் இரக்கமுண்டு, மகிழ்ச்சியுண்டு என்பதனை எங்களின் உண்மையான சீடத்துவ வாழ்வின் மூலம் நிலைநிறுத்த எங்களைத் திடப்படுத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. மறுவுரு பெற்ற இறைவா, எங்கள் திருஅவை புதிய மறுமலர்ச்சி பெற்ற தூய ஆவியால் நிரப்பப்பட்ட அவையாகத் திகழ, திருமுழுக்குப் பெற்ற அனைவரும் திருத்தூதரைப் போல உறுதியான வாழ்வு வாழ உமதருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 22.10.2017 ஆண்டின் பொதுக்காலம் 29ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. D.V.R. ராஜா

I. எசா. 45: 1,4-6 II. 1தெச 1: 1-5அ மத் 22: 15-21

இறைவன் தன்னை அறியாதிருந்த சைரசுவை அவரே பெயர் சொல்லி அழைத்து அருட்பொழிவு செய்து, யாக்கோபு இஸ்ரயேலின் நிமித்தம், பெயர் புகழளித்து, இடர்களுக்கு நீங்கலாக்கி எதிரிகளிடமிருந்து விடுதலையும், தடைகளைத் தகர்த்து புதையல்களையும், பொக்கிஷங்களையும் தருவேன் என்கிறார். ஆனால் என்னைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று தனது மகத்துவத்தையும், உடனிருப்பையும் முதல் வாசகத்தில் குறிப்பிடுகிறார்.

தெசலோனிக்க மக்கள் கிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் பொறுமையுள்ளவர்களாய், நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தார்கள். ஆயினும் அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தது இறைவனே என்று தமது மகத்துவத்தை இரண்டாம் வாசகத்தில் வெளிப்படுத்துகிறார். நற்செய்தியில் இயேசுவை தமது பேச்சில் சிக்கவைக்க எதிரிகள் சூழ்ச்சி செய்தபோது அவர் ஞானமாக கடவுளுக்குரியதைக் கடவுளுக்கும் அரசருக்குரியதை அரசருக்கும் கொடுங்கள் என்று நயம்பட உரைத்து விலகிச் செல்கின்றார். நாம் விசுவாசத்தில் நிலைபெற்றிருந்தாலும் நம்மைப் பெயர்சொல்லி அழைத்தது இறைவன் என்றும், அவரைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்ற நிஜத்தையும் நாம் என்றென்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

அவ்வாறு நாம் வாழும்போது தமது ஊழியர்களை இன்னல், இடர்களினின்று விடுவித்துக் காப்பாற்றவும், விடுதலையளிக்கவும் அருட்பொழிவு செய்து புதையல்கள், பொக்கிஷங்கள், வளமைகள் அளித்து ஆசிர்வதிக்கவும், எதிரிகளின் சூழ்ச்சி வலையில் சிக்காமலிக்க ஞானத்தையும், அறிவையும் வழங்கவும் விழைகிறார். எனவே நம்மை அழிக்கத் தூண்டும் எதிரிகளிடமிருந்து நம்மை விடுவிக்க இறைவனிடம் ஞானத்தை வேண்டுவோம். அவ்வாறு எதிரிகளிடமிருந்து விடுவித்த தருணங்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. **திருச்சபைக்காக:** இரக்கமுள்ள இறைவா, எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், பொதுநிலையினர் இவர்களை நீரே பெயர்சொல்லி அழைத்து அருட்பொழிவு செய்துள்ளீர். இவர்களுக்கு உடல் உள்ள நலன் தந்து உலக மக்களை விசுவாச வாழ்வில் வழிநடத்திச் செல்ல வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. **நாட்டு மக்களுக்காக:** கனிவுள்ள இறைவா, எமது நாட்டையாளும் தலைவர்கள் தங்கள் சொந்த கருத்துக்களையும் எண்ணங்களையும் மக்களிடையே திணிக்காமல், மக்களின் சூழலுக்கும், மனநிலைக்கும்,

பொருளாதார நிலைக்கும் ஏற்றவாறு திட்டங்களும், கொள்கைகளும், செயல்பாடுகளும், அமையவும் அமைதிச் சோலையாய் எம் நாடு விளங்கி மக்கள் தன்நிறைவடைந்து இன்புற்று வாழவும் ஆட்சியாளர்களுக்குக் கனிவான இதயம் தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. **இளையோருக்காக:** ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, இளையோர் தீச்செயல், துர்குணம், முரட்டுத்தனம், ஆடை அலங்காரம் போன்றவைகளைக் களைந்து பெற்றோர்க்கும், பிறந்த நாட்டிற்கும் பெருமைச் சேர்ப்பவர்களாய் திகழ்ந்திட போதுமான ஞானத்தை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. **நலிந்தோருக்காக:** கருணையின் இறைவா, சமுதாயத்தில் உள்ள ஒடுக்கப்பட்டோர், ஏழைகள், ஆதரவற்ற விதவைகள், முதியோர்கள், பிணியாளர்கள், இயற்கைச் சீற்றத்தாலும் குடும்பச் சூழலாலும் பெற்றோர்களின்றி தவிக்கும், தனித்துவிடப்பட்ட குழந்தைகள், சிறார்கள், இவர்கள் அனைவரையும் நீர்தாமே தாயும் தந்தையுமாயிருந்து ஆதரித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.10.2017 புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் திருவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. பத்மாவதி

கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுதும் இசைவாகப் பொருந்தி ஆண்டவர்க்கென்று தூய ஆவியால் கோவிலாக வளர்ச்சி பெறுகிறது (எபே. 2:21).

**சீமோன்:** கானான் ஊரைச் சேர்ந்தவர். உரோமையர்கள், பாலஸ்தீனாவை கி.மு. 63ல் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்தார்கள். அதுமுதல் மக்களை வளைத்தார்கள். இவர்களுக்கு எதிராக மண்ணின் மக்களைக் காக்க புறப்பட்டவர்கள் தீவிரவாதிகள், வழிப்பறிக் கொள்ளையர்கள் என்று முத்திரையிடப்பட்டார்கள். 23வயதுவரை வணிகம் செய்துவந்த சீமோன், இந்த குழுவினரோடு தம்மைச் சேர்த்துக்கொண்டு தீவிரவாதியாகி மக்களுக்காக வாழ்ந்தவர். இந்நேரத்தில் இயேசு கானாவூர் திருமணத்துக்குச் சென்றார். அங்கு இயேசுவைக் கண்ட சீமோன் அவர்மீது நம்பிக்கைக்கொண்டு அவரைப் பின்பற்றி இருக்கலாமென்று நம்பப்படுகிறது. இயேசுவின் இறப்பு உயிர்ப்பிற்குப் பிறகு நற்செய்தியை அறிவிக்கப் புறப்பட்ட சீமோன் எகிப்து, சீரின், லியோ பெர்ஷியா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். "சீமோன் யூதாவின் பாடுகள்" என்று நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல் தரும் நற்செய்தியைத் திருச்சபை ஏற்றுக் கொள்கிறது. அதன்படி சுவாரின் என்ற இடத்தில் சீமோனை இரம்பத்தால் அறுத்துக் கொன்றார்கள் கயவர்கள் என்கிறது வரலாறு.

**புனித யூதா ததேயு:** அன்னை மரியாளின் உறவினரான மரிய மற்றும் புனித யோசேப்பின் உறவினரான அல்பேயு என்போர் இவரது பெற்றோர்.

இயேசுவிற்கு சகோதரர் முறையிலுள்ள இவர்கள் முகமும் இயேசுவின் முகம்போல் இருந்ததால்தான், யார் இயேசு என்று காட்டிக்கொடுக்க யூதாஸ் விலைப்பேசப்பட்டான். தோமாவுடன் இணைந்து மெசபதோமியா சென்ற யூதா அங்கிருந்து எடுடசாவிற்குச் சென்று 43ம் ஆண்டு முதல் 60ம் ஆண்டுவரை அங்கு நற்செய்தி போதித்தார். பல நாடுகளுக்குச் சென்று நற்செய்தி அறிவித்த யூதா, பெர்ஷியாவில் சீமோனைச் சந்தித்தார். இணைந்து கிறிஸ்துவின் விழுமியங்களை போதித்த இருவரும் 68ம் ஆண்டு சுவாரீன் வந்தார்கள். அங்கிருந்த பூசாரிகள் இவர்களைப் பிடித்துக் கட்டினார்கள். சீமோனை இரம்பத்தால் அறுத்து கொலை செய்தார்கள். யூதாவை அம்புகள் எய்தியும், ஈட்டியால் குத்தியும் கொலை செய்தார்கள்.

புனித பிரிஜித்திற்குக் காட்சி கொடுத்த இயேசு கிறிஸ்து "யூதா ததேயுவின்மீது பக்தி கொள்வோர் கேட்கும் வரங்களைப் பெற்றுக்கொள்வார்கள்" என்று கூறினார். மேலும் தமது பக்தர் ஒருவருக்குக் காட்சி கொடுத்த யூதா ததேயு "என்னுடைய பாதுகாப்பையும் ஆறுதலையும் நாடி வருவோர்க்கு உதவி செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என்று சொன்னார். இத்திருப்பலியில் பங்கேற்கும் நாமும் இப்புனிதர்களிடம் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும்படி மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோரின் அடித்தளமாகவும் கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டிடமாகிய திருச்சபையைக் காத்து வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசிர்வதித்து உலகமக்களுக்கு அவர்கள் பணிபுரிய நல்ல உடல் உள்ள நலன்களைப் பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் தந்தையே, உமது திருமகன் இயேசு யூதேயா, சீதோன் கடற்கரைப் பகுதிகள் முழுவதிலுமிருந்து வந்த மக்களின் பிணிகளைப் போக்கி, தீய ஆவிகளால் பிடிக்கப்பட்டவர்களை குணமாக்கினாரே, இதோ உம் மக்கள் நாங்களும் எம்மை வாட்டி வதைக்கும் எல்லா நோய்களிலிருந்தும் குணமடைய உமது திருமகனின் குணமளிக்கும் ஆற்றலைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. விண்ணகத் தந்தையே, விளைச்சலின்றி காய்ந்துபோன வயல் வெளிகளையும், நீரின்றி வரண்டுப்போன ஏரி, குளங்களையும், தண்ணீரின்றி தவிக்கும் உம் பிள்ளைகளையும் பாரும், எம் குறைகளைத் தீர்க்க நல்ல மழையைத் தரும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 29.10.2017 ஆண்டின் பொதுக்காலம் 30ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

I. வி.ப. 22: 21-27 II. 1தெச 1:5இ-10 மத் 22: 34-40

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, தாய் திருச்சபையானது இன்று பொதுக்காலத்தின் 30ம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றது. இன்றைய மையக்கருத்தாக இறைவனை அன்புச் செய்ய வேண்டும். நம் அயலாரையும் அன்பு செய்ய வேண்டும் என்று வாசகங்கள் அறிவுறுத்துகின்றன. இன்றைய முதல் வாசகத்தில் தந்தை இறைவன் தன் மக்களை நீங்கள் அடிமையாய் இருக்கும்பொழுது விடுதலை அளித்தவர் நானே. நீங்கள் அனாதையாய் இருந்தபோது ஆதரவு அளித்தவரும் நானே, நீங்கள் பசியாய் இருக்கும்பொழுது உணவளித்தவரும் நானே. எனவே உங்கள் முந்தைய நிலையை நினைத்துப் பார்த்து உங்கள் அயலாரை அன்பு செய்யுங்கள் என்கிறார்.

இரண்டாம் வாசகத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட தெசலோனிக்க மக்கள் வாழும் தூய வாழ்க்கையைப் புகழ்ந்து, மற்ற சபையினருக்கு இவர்களை முன்மாதிரியாகக் கூறுகிறார். நற்செய்தியில் இறை மகன் இயேசு, முதல் இரண்டு வாசகங்களை உள்ளடக்கி ரத்தினச் சுருக்கமாக இரண்டு கட்டளைகளில் அடக்குகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக உன்னைப் படைத்து, காத்து, வழிநடத்திவரும் இறைவனை அன்பு செய், இரண்டாவது உன்னை நீ அன்பு செய்வதுபோல் உன் அயலானையும் அன்பு செய் என்கிறார். நாம் வாழுகின்ற சமுதாயத்திற்கு உகந்தவராக வாழ்வது பற்றியும், இறைவனுக்கு உகந்தவராக வாழ்வது பற்றியும் கூறுகிறார். உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனதோடும் இறைவனை அன்பு செய்யும் வரமும், உடனிருக்கும் நம் சகோதரர்களை தாராள மனதோடும், திறந்த உள்ளத்தோடும் அன்பு செய்யும் வரமருள வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. திருச்சபையின் நாயகனே இறைவா, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்தறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் கால கட்டங்களிலும் விளக்கி உரைப்பது நம் திருச்சபையின் கடமை என உணர்ந்து செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வளிக்கும் நாயகனே இறைவா, வளரும் இளம் சமுதாயத்தினர் காலத்தின் கவர்ச்சிகரமான மாய வலைகளில் சிக்கி தன்னிலை இழந்து எதிர்காலத்தை வெறுமையாக்கிக் கொள்ளும் நிலை வராமல் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நற்செய்தியின் நாயகனே இறைவா, எளியோருக்கு நற்செய்தியை அறிவிக்க வந்த நம் இயேசுவைப் போன்று, அவரின் போதனைகளை ஏற்றுக்கொண்டதால் நற்செய்திக்காக வேதசாட்சிகளாக மரித்த சீடர்களைப் போன்று, செயல்படாவிட்டாலும் யாம் ஏற்றுக்கொண்ட திருச்சபைக்காக எம்மால் முடிந்தளவு திருத்தொண்டு ஆற்றக்கூடிய உற்சாகமான மனதினை மனிதர்களுக்கு வழங்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பான இறைவா, மனிதம் மனிதத்தை நேசிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும். தீங்கிழைக்கக் கூடாது என்பதே உமது நோக்கம். ஆனால் இன்று பலவிதமான மனித நேயமற்றச் செயல்களால் துன்புறுவோர், உயிரிழப்போர் அநேகர். ஆகவே இப்பேர்ப்பட்ட தீச்செயல்களைச் செய்து உமது சினத்திற்கு ஆளாகாமல் நாங்கள் வாழ உமது இரக்கத்தினாலும் அன்பினாலும் நிரப்பி ஆசீர்வதிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## 1. செபமாலை நமது ஜெயமாலை

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

இறைவனுக்கும் மனிதருக்குமிடையே உறவைப் புதுப்பித்து அதை வளர்க்கும் எல்லா ஆன்மீகச் செயல்களையும் பக்தி முயற்சிகள் எனலாம். தனித்தோ, பிறரோடு சேர்ந்தோ, கிறிஸ்தவர்கள் செய்யும் செப, தபச் செயல்கள் எல்லாம் பக்தி முயற்சிகள் ஆகும். பக்தி முயற்சிகள் பல வகைப்படும். எடுத்துக்காட்டாக சிலுவைப் பாதை, நற்கருணைச் சந்திப்பு, நவநாட்கள், தியானம், ஆன்ம சோதனை, திருயாத்திரைகள், திரு இருதய பக்தி, புனிதர்கள்மீது பக்தி, செபமாலை செபித்தல் போன்றவை. இந்த பக்தி முயற்சிகளில் செபமாலைப் பக்தியானது தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகவும் விளங்குகிறது. செபமாலை நம் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் அன்று முதல் இன்றுவரை பொதுச்செபமாகவும், தனிச்செபமாகவும், குடும்பச் செபமாகவும் பாரம்பரியமாக செபிக்கப்பட்டு வருகிறது. செபமாலைச் சொல்வதென்பது மனோத்தத்துவ முறையிலான மிகச்சிறந்த செபமாகும். இது சிதறிக்கிடக்கும் நமது ஆற்றல்களையெல்லாம் சேர்த்து இணைக்கிறது. உள்ளம், உதடு, விரல்கள், சிந்தனை ஆகிய அனைத்தையும் ஒன்று படுத்தும் ஆக்கச் சக்தியாக உருவெடுக்கிறது என்று செபமாலையின் சிறப்பை ஆயர் புல்டன் ஷீன் கூறுகிறார்.

இத்தகைய புனித செபமாலை, கிறிஸ்தவர்களின் எளிய பக்தி முயற்சியில் முதலிடம் பெறுவது முற்றிலும் பொருந்தும். இந்த முதன்மையான செபமாலையில் அனைவரும் இணைவது அவசியமான ஒன்றாகிறது. அதில் சொல்லப்படும் விசுவாசப்பிரமாணம் நாம் திருமுழுக்கின்போது

பெற்ற உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கிறது. கர்த்தர் கற்பித்த செபம், இறை உறவில் வளர உதவும் செபங்களிலெல்லாம் முதன்மையான செபம். மங்கள வார்த்தை செபம், விண்ணையும், மண்ணையும் இணைக்க இறைவன் அனுப்பிய தேவதூதரின் வாழ்த்துச் செய்தியும், அன்னைக்குப் பரிந்துரையும் அடங்கிய அற்புத செபம். செபம் முடிவில் சொல்லப்படுகின்ற செபம் மூவொரு கடவுளுக்குரிய மகிமையைத் தருகிறது. ஓ என் இயேசுவே, எனும் செபம் பாவ வாழ்வைக் கைவிட அழைக்கிறது. இவ்வாறு செபிக்கப்படுகின்ற அனைத்து தேவ இரகசியங்களும், இறைவனின் அன்பை உணர்ந்து மீட்பினை அடைய உதவுகின்றன.

இப்படிப்பட்ட புனித செபமாலை, எளிய மக்களின் எளிய பக்தி முயற்சியாக அமைவதில் வியப்பொன்றும் இல்லை. திரும்பத் திரும்ப அருள் நிறைந்த மந்திரத்தைச் சொன்னாலும், நமது சிந்தனையெல்லாம் நமது ஆண்டவரின் பிறப்பு, வளர்ப்பு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்பு, தூய ஆவி, மரியன்னையின் மகத்துவம் பற்றியே மகிழ்ச்சி, துக்க, மகிமை ஆகிய மூன்று மறையுண்மைகளில் தியானிப்பதோடு நின்றுவிடுகிறோம். தேவ அன்னைக்குப் பிடித்தமான செபமாலையை முழுமையாக்கிட, இயேசுவின் வாழ்வையும் தியானிப்பதற்குத் துணையாக அவரின் பணி வாழ்வை தியானிப்பதை ஒளியின் மறையுண்மைகள் என அழைத்து, வியாழக்கிழமைகளில் தியானிக்கவும் பணித்துள்ளார் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்.

துருக்கிய சுல்தான்களின் தலைவனான இரண்டாம் சோலிமேன் என்பவனின் மகன் இரண்டாம் செலிம், உரோமாபுரி மற்றும் வியன்னாவையும், திருத்தந்தை மற்றும் பேரரசையும் தனதாக்கிக்கொள்ள மெடிட்டேரானியன் கடற்பகுதியில் லெபான்டோ வளைகுடாவில் திருத்தந்தையின் தலைமைக்குக் கட்டுப்பட்டு அவருக்கு ஆதரவாயிருந்த ஸ்பெயின் மற்றும் வெனிஸ் கடற்படையோடு மோதினான். அதுகணம் உலகத்து கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், உரோமையிலுள்ள இராயப்பர் தேவாலயத்தில் இருந்த மக்கள் அனைவரும் பக்தியோடும், நம்பிக்கையோடும் செபமாலையைச் சொல்லிக்கொண்டு பவனியாகச் சென்றனர். செபமாலை வெற்றியைத் தந்தது. இந்த வெற்றியின் நினைவாய் ஆண்டின் அக்டோபர் 7ம் நாளை "செபமாலை அன்னை விழாவாகக் கொண்டாட திருத்தந்தை 5ம் பத்திநாதர் அறிவித்தார்.

போரில் வெற்றிக்குமட்டுமல்ல போர் சூழலைக்கட்டுப்படுத்த செபமாலை ஒரு கருவியாயிருந்தது. கி.பி. 1915ல் ஆஸ்திரியா நாட்டின்மீது சோவியத் ரஷ்யா பனிப்போர் நடத்திக்கொண்டிருந்த சூழலில், எங்கும் போர் அபாயம் காணப்பட்டது. ஆஸ்திரியா நாட்டு மக்கள் செபமாலைமீது நம்பிக்கை வைத்தவர்களாய் தொடர்ந்து பக்தியோடு செபமாலைச் செபித்தார்கள். அதிசயம், சோவியத் படைத்துருப்புகள் தன்னிச்சையாக நாட்டைவிட்டு வெளியேறின. இந்தச் செய்தி மார்ச் திங்கள் 13ம் நாள்

செய்தித்தாளில் அறிவிக்கப்பட்டது. இன்னுமொரு சிறப்பு என்னவென்றால் அந்த நாளே பாத்திமா அன்னை காட்சி தந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவு நாள். வரலாற்று நிகழ்வுகளில், அதன் மாற்றங்களில், போர் அபாய சூழலில் உலக நாடுகளிலெல்லாம் செபமாலை பக்தி சிகரத்தை அடைந்துள்ளது, புரட்டி எடுத்துள்ளது. செபமாலையின் வல்லமையால் போரின் வெற்றி மட்டும்தான் கிடைக்குமென்பதல்ல, நம் துன்பம் அகலும், தீராத நோயிலிருந்து நற்சுகம், உடற்கூறு குறைகளிலிருந்து பூரணகுணம், குழந்தைப் பேறு, ஆறாத புண்கள் ஆறியது, கட்டிகள் கரைந்தது, அனைத்து உடல்சார்ந்த வலிகளிலிருந்து விடுதலை, மூட்டுப்பிசகு, நரம்புத் தளர்வு, மனவளர்ச்சி குறைவு, மனநோய், புற்றுநோய், கண்பார்வை குறைபாடுகள் போன்று மனுக்குலத்தை பாதிக்கும் அனைத்து வகையான பிணிகளிலிருந்தும் விடுதலைக் கிடைக்கிறது. வாழ்வின் ஒவ்வொரு நிலையிலிருந்தும் நம் கஷ்டங்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுவித்து அதில் வெற்றிக் கண்டிட செபமாலைதான் பெரும் துணை.

ஆம் செபமாலை செபத்திற்கு மாலையாக, செழுமையின் மாலையாக, அனைவர் கைகளிலும் தவழ்ந்திடும் அழகிய மாலையாக, விண்ணகத்திற்கு இட்டுச்செல்லும் வெற்றியின் மாலையாக, நம் பாவங்களைக் கழுவி, நம்மைத் தூய்மைப்படுத்தும் மாலையாக நமது ஆண்டவர் மீதான அன்பை நம்மில் பற்றியெறியச் செய்கிறது. வரலாற்று சிறப்புமிக்க வல்லமையின் செபமாலை, இனிய பழமையான நீரூற்றாக, இன்றும் தூய்மையான நீராக, குறைகளைப் போக்குகின்ற, வெற்றியை அருளுகின்ற, மனுக்குல மகிழ்வின் வாழ்வுக்கானதாய் விளங்குகிறது. அன்னை தெரேசா எங்கு சென்றாலும் இடைவிடாது தம் கரங்களில் செபமாலையை உருட்டி, செபமாலையைச் செபித்துக்கொண்டே செல்வாள். அதுதான் தன் பணிகளில் தனக்கு பலம் ஊட்டி, பல தடைகளைத் தகர்க்க துணை நின்றதாகச் சொல்வாள். திருத்தந்தை ஆதிரியான் "செபமாலை தீயவனின் சக்தியை விலக்கும்" என்கிறார். மனிதமே இத்துணை சிறப்புமிக்க செபமாலையைச் செபிப்போம், ஜெகத்தினை வெல்வோம்.

## 2. அருளாளர் தொன் மைக்கேல் ரூவாவின் விசுவாச வாழ்வு

திரு. ஜான் அலெக்ஸ்

பிரான்சிஸ்கு சலேசியார் துறவற சபையை நிறுவிய தொன் போஸ்கோ மறைந்து சில நாட்களே ஆகிய சமயம். அந்த சபையின் எதிர்காலம் ஒரு புதிராகவும், நிலையற்ற தன்மைக் கொண்டதாகவும் மாறி வருகிற நேரம். ஏனென்றால் தொன் போஸ்கோவினால் மட்டுமே உயிர்பெற்று வாழ்ந்து வந்தது அச்சபை எனலாம். ஆகவே தான் அவர் மறைவுக்குப் பின் எதிர்காலத்தை இழந்து வாடிக்கொண்டிருந்தது அந்த சபை. யார் இச்சபையைத் தலைமையேற்று வழிநடத்துவது? பல துன்பங்களையும் சவால்களையும் ஏற்க தைரியம் கொண்ட ஒருவரே இதற்கு சரியானவர். அதிலும் பிட்மான்ட் மறைமாவட்டத்தில் துறவற சபைகள்

மடிந்து வருகிற காலம் அது. தொன் போஸ்கோவால் தெம்பூட்டப்பட்டு அவர் குடும்பத்தில் வாழுகிற பொதுநிலை சலேசியர்களின் உதவியாலும் குழுவாக துறவற இல்லங்களில் வாழும் திருநிலை சலேசியர்களினாலும் பிட்மான்ட் திருச்சபையில் ஒரு நம்பிக்கையை சலேசிய சபை ஏற்படுத்தி தந்திருந்தது. சலேசிய சபை தனது பணிகளில் சிறந்து விளங்கினாலும் அதற்கு இருக்கும் கடன்களுக்கு யார் பொறுப்பேற்பது? ஆம் 6 லட்சம் லீரேக்கள் கடன்பட்டிருக்கிறது. இருப்பினும் ஒரு நம்பிக்கை, திருத்தூதர் பணி 5:39ல் உள்ளது போல, "அவை கடவுளைச் சார்ந்தவை என்றால், நீங்கள் அவற்றை ஒழிக்க முடியாது".

மற்றொரு புறம் தொன் போஸ்கோவிற்குப் பிறகு சபையை வழிகாட்டக்கூடிய முதல் தலைவரை, வாரிசைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு தொடங்கியது. ஒட்டுமொத்த சலேசியர்களின் ஒரே முடிவாக ஒரே குரலாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் தொன் மைக்கேல் ரூவா. இதனை 1884 நவம்பர் 27ம் நாள் கத்தோலிக்க தலைமைப்பீடம் உறுதி செய்தது. தொன் போஸ்கோவின் வாரிசாக அவரது இடத்தில் இருந்து சலேசிய சபையை வழிநடத்தும் தகுதியற்றவராகவே தன்னை எப்போதும் நினைத்தார் தொன் ரூவா. குறிப்பாக அவரது மனப்பூர்வ ஒப்புதல் அடங்கிய கோப்பு சலேசிய ஆவணக்காப்பகத்தில் இல்லை என்பது விந்தையான ஒரு செய்தி. இதற்கிடையில் இச்சபையுடன் ஒத்த கோட்பாடுகளும் பணிகளும் உடைய வேறொரு சபையுடன் இணைப்பது பற்றி திருச்சபையின் நிபுணர்கள் முயற்சித்தார்கள். சலேசியர்களின் நண்பரும் ஆயருமான எமிலன் மனகார்டியா தலையிட்டு தொன் ரூவாவின் தலைமையில் சலேசிய சபையானது தொடர வழிசெய்து சலேசிய சபையின் எதிர்காலத்தை உயர்த்தினார். அதனைத் தொடர்ந்து 1888 பிப்ரவரியில் தொன் ரூவாவை சலேசிய சபையின் தலைவராக நியமித்து திருத்தந்தை தனது அங்கீகார ஆணையின் மூலம் உறுதி செய்தார்.

இதெல்லாம் சரி, யார் இந்த மைக்கேல் ரூவா? என்று கேட்கிறீர்கள் அல்லவா? இதோ தொடர்கிறது. ஜுன் 9, 1837ல் ஒன்பது பிள்ளைகளில் கடைசியாக பிறந்தவர் மைக்கேல் ரூவா. தன் சகோதரர் லூயிஸ், தொன் போஸ்கோவின் ஆரட்டரிக்குச் சென்று வருவது வழக்கம். இப்படித்தான் ரூவாவுக்கும் ஆரட்டரி பற்றி தெரியவந்தது. தனது 15 வயதில் 1852ல் தொன் போஸ்கோவின் ஆரட்டரியில் வந்து சேர்ந்தார். இன்னொரு முக்கியமான நிகழ்வு ரூவாவிற்கு ஏற்பட்டது. தொன் போஸ்கோ தன் ஆரட்டரிக்கு வரும் பிள்ளைகளுக்கு மெடல்கள் கொடுப்பார். ரூவா ஒருமுறை தொன் போஸ்கோவிடம் மெடல் பெறுவதற்காகத் தன் கையை நீட்ட, தொன் போஸ்கோ மெடலுக்குப் பதிலாக தன் கையை பாதியாகத் தருகிறேன் என்றாராம். இதன் மூலம் சலேசிய சபைக்கும் ரூவாவிற்கும் இருக்கப் போகும் உறவைப் பற்றி தொன் போஸ்கோ அப்போதே முன் தெரிந்து வைத்திருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சலேசிய சபையை ஆரம்பிக்கும் எண்ணத்தை தொன் போஸ்கோ பகிர்ந்துகொண்டவர்களில் ரூவாவும் ஒருவர். அதுமுதல் தொன் போஸ்கோவுடன் சேர்ந்து சலேசிய சபையின் வளர்ச்சியில் 36 ஆண்டுகள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் ரூவா. தனது முதல் வார்த்தைப்பாட்டை 1855ல் எடுத்த நாள் முதல் ஏறக்குறைய 22 ஆண்டுகள் சபையின் முதல் ஆன்மீக இயக்குனராக பணியாற்றினார். சலேசிய குருவாக 1860ல் திருநிலைப்படுத்தப்பட்டார். மிரபெல்லோவில் உள்ள கல்லூரியின் முதல் இல்லத்தந்தையாகப் பொறுப்பேற்று 26 ஆண்டுகள் பணியாற்றினார். பிறகு கத்தோலிக்க நாளிதழின் மேலாளராகவும், வல்தோக்கோவின் துணை இல்லத்தந்தையாகவும் பணியாற்றினார்.

உருவாக்கத்தில் பெரிதும் துணையாகத் திகழ்ந்தார், சலேசிய அருட்கன்னியர்களின் சபைக்கான இயக்குனராகவும் எல்லாவற்றிற்கும் மேலாக தொன் போஸ்கோவின் பயணங்களில் அவரோடு உடனிருந்து பயணித்த பாக்கியம் பெற்றவராகவும் தொன் ரூவா திகழ்ந்தார். தனக்குப் பிறகு சலேசிய சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று சபைத்தலைவராக தொன் ரூவாவை நியமிக்க வேண்டும் என்ற தொன் போஸ்கோவின் இறுதி வேண்டுகோளை ஏற்று திருத்தந்தை 13ம் லியோ, தொன் போஸ்கோவின் மறைவுக்கு பின் 1888ல் தொன் ரூவாவை சலேசிய சபைத் தலைவராக நியமித்து உறுதி செய்தார். ஒழுங்குமுறைகளையும் சட்டதிட்டங்களையும் போற்றி நேர்மையாகக் கடைப்பிடிப்பதால் “வாழும் விதிமுறை” என்று தொன் ரூவாவை சலேசியரும் மற்றவரும் அன்போடு அழைப்பதுண்டு. 1909ல் தொன் ரூவாவின் குருத்துவ பொன்விழாவினைச் சிறப்பித்தனர். தன்னுடைய பணிகளை அருளாளர் பிலிப் ரினால்டி அவர்களிடம் ஒப்படைத்து கொண்டார். உலகில் மொத்தம் 773 ஆக இருந்த சலேசியர்களின் எண்ணிக்கை 4000 ஆகவும், 64 ஆக இருந்த சலேசிய இல்லங்களை 345 ஆகவும், 6 ஆக இருந்த சலேசிய மாநிலங்களை 34 மாநிலங்களாகவும் விரிவுப்படுத்தி 33 நாடுகளில் சலேசியப் பணியை வளர்த்த பெருமை தொன் ரூவாவிற்கு உண்டு.

தொன் போஸ்கோவின் கட்டளைக்கேற்ப தொன் ரூவா மிரபெல்லோவின் இல்லத் தந்தையாக அனுப்பப்பட்டபோது, அங்கு இருந்தவர்களின் பேச்சு என்ன தெரியுமா? வல்தோக்கோவில் தொன் போஸ்கோவைப் போல மிரபெல்லோவில் தொன் ரூவா நடந்து கொள்கிறார் என்பதுதான். அதுமட்டுமல்ல தொன் போஸ்கோவின் இறப்புக்குப் பின்னும் அவரது அரவணைப்பை உடனிருப்பை உணர்ந்தவராக வாழ்ந்தார் தொன் ரூவா. அதனால் தான் சபைக்கு இருந்த 6,00,000 லீரே கடனை திரும்பக் கேட்டபோது கர்தினால் அல்மோன்டாவிடம் தொன் ரூவா மறுமொழியாக சொன்னது, “மேதகு கர்தினால் அவர்களே தொன் போஸ்கோ விண்ணகத்திலும் எங்களுக்காக உழைத்துக்கொண்டிருக்கிறார்” என்பதே. உண்மையில் பாருங்கள் தொன் ரூவா மரித்தபோது சபைக்கு எந்த கடனும் இல்லை.

தன்னுடைய வாழ்நாள் முழுவதும் செய்த பணிகள் அனைத்தும் தொன் போஸ்கோவின் கனவுகளும் இலட்சியங்களும் தவிர வேறில்லை. தொன் போஸ்கோவின் எண்ணங்கள் சிந்தனைகள் பல இருந்தாலும் 1886 ஏப்ரல் 9ம் நாள் அவர் கண்ட தீர்க்கதரிச கனவு அதாவது எதிர்கால மறைபோதக பணியான சிலி நாட்டிலிருந்து சீனாவிற்கு மறைப்பணியாளர்களை அனுப்பியது. அதன் அடிப்படையில் நமது நாட்டிற்கும் முதன் முதலில் சலேசியர்கள் அனுப்பிவைத்தவர் தொன் ரூவா என்பதை நினைக்கும் போது நாம் பெருமைக் கொள்ளவேண்டும். இவ்வாறாக தொன் போஸ்கோவின் எண்ணங்கள் அனைத்தையும் தொன் ரூவா நிறைவேற்றினார் என்பது வரலாறு கூறும் உண்மை. "தொன் போஸ்கோவின் தகுதியுள்ள பிள்ளைகளாக வாழ்வதே" என்ற அன்பு கட்டளையை செய்தியாக விட்டுச்சென்றவர் தொன் ரூவா. அதுவே அவரது அன்றாட செபமாகவும் இருந்தது. அவர் மரணப்படுக்கையில் இருக்கும் போதுகூட தனது சலேசியர்களுக்கு தொன் போஸ்கோ சொன்ன அதே வார்த்தைகளைதான் சொன்னார்.

"விண்ணகத்தில் நாம் அனைவரும் ஒன்றாக சந்திப்போம்" என்பதே அந்த நம்பிக்கையூட்டும் வார்த்தைகள். தொன் ரூவா, தனது 73 வயதில் ஏப்ரல் 6, 1910ல் மறைந்தார். அக்டோபர் 29, 1972ல் திருந்தந்தை 6ம் பவுல் இவரை அருளாளராக உயர்த்தினார். அப்போது திருத்தந்தை, "தொன் போஸ்கோவில் உருவாகிய சலேசிய சபை, தொன் ரூவாவில் தொடர்ந்து வளர்கிறது... தொன் போஸ்கோவை தன் பள்ளியாகவும், அவரது ஒழுங்குமுறைகளை தன் உள்ளுணர்வாகவும், அவரது புனிதத்துவத்தை தனது முன்மாதிரியாகவும் கொண்டு வாழ்ந்தவர் தொன் ரூவா" என்று குறிப்பிட்டது சலேசியர்களுக்கும், சலேசிய குடும்பத்திற்கும் மட்டுமல்ல எல்லா இறைமக்களுக்கும் தொன் ரூவாவின் வாழ்வு நிச்சயம் புனிதத்துவத்திற்கான ஒரு பாதையாக இருந்தது என்பது உண்மை.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. 2016ம் ஆண்டு ஏமன் நாட்டின் ஏடனில் கடத்தப்பட்ட சலேசிய இந்திய அருள்பணியாளர் டாம் உழுன்னலில் (Tom Uzhunnalil) அவர்கள், செப்டம்பர் 12, விடுதலை செய்யப்பட்டுள்ளார் என, தென் அரேபிய அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி ஆயர் பால் ஹிண்டர் (Paul Hinder) அவர்கள் அறிவித்தார். இவ்விடுதலைக் குறித்து இணையதளத்தில் செய்தி வெளியிட்டுள்ள ஆயர் பால் ஹிண்டர் அவர்கள் அருள்பணியாளர் டாம் அவர்களின் விடுதலைக்காக முயற்சிகள் எடுத்தவர்கள், அவர் நலத்தோடு விடுதலைச் செய்யப்பட வேண்டுமெனச் செபித்தவர்கள் ஆகிய எல்லாருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

2. இந்திய ஆயர் பேரவையும், தென் அரேபிய அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியும், அருள்பணியாளர் டாம் அவர்களின் விடுதலைக்காக முயற்சித்த ஏமன் நாட்டு அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். 58வயது நிரம்பிய கேரளாவைச் சேர்ந்த, சலேசிய அருள்பணியாளர் டாம் உழுன்னலில் அவர்கள், 2016ம் ஆண்டு மார்ச் 4ம் தேதி, ஏடனில், அன்னை தெரேசாவின் பிறரன்பு மறைப்பணியாளர் சபையின் முதியோர் இல்லத்திலிருந்து, இஸ்லாம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அந்த முதியோர் இல்லத்தை இஸ்லாம் தீவிரவாதிகள் தாக்கியதில் அன்னை தெரேசா சபையின் நான்கு அருள்சகோதரிகள் மற்றும் 12பேர் கொல்லப்பட்டனர். 18 மாத பிணையலுக்குப்பின் தற்போது ஏமனிலிருந்து மஸ்கட் சென்றுள்ள அருள்பணி டாம் அவர்கள், விரைவில் இந்தியா திரும்புவார் என இந்திய அரசு அறிவித்துள்ளது.

3. எந்த ஒரு தண்டனையும் நம்பிக்கை என்ற தொடுவானத்தை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். நம்பிக்கையற்ற தண்டனைகள் வெறும் சித்திரவதைகளாக மாறிவிடும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அர்ஜென்டினா நாட்டு இளையோருக்கு அனுப்பிய ஒரு காணொளிச் செய்தியில் கூறியுள்ளார். இளம் வயதில் குற்றங்கள் புரிந்து சிறை வைக்கப்பட்டிருப்போருக்கு அர்ஜென்டினா நாட்டின் புவெனஸ் அயிரஸ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள எஸெயிஸா (Ezeiza) மையம் என்ற சீர்த்திருத்தப்பள்ளி "மாணவர்களுக்கு" திருத்தந்தை இந்த செய்தியை அனுப்பினார்.

4. வத்திக்கானிலுள்ள தொழிற்கூடத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பீடத்தில் ஏறத்தாழ நூறு தொழிலாளர்களுக்கு திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மத்தேயுவின் அழைப்புப் பற்றி கூறும் இந்நாளைய நற்செய்தியை மையப்படுத்தி மறையுரை வழங்கினார். இயேசு நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே அழைக்க வந்தார் என்றும், நாம் எல்லாரும் பாவிகளாய் இருப்பதால் இயேசுவை நம்மிடம் ஈர்ப்பதற்கு வாய்ப்பாக இது உள்ளது என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறையுரை வழங்கினார். இத்திருப்பலியின் இறுதியில் தொழிலாளர்கள் மரச்சிலுவை ஒன்றை திருத்தந்தைக்குப் பரிசாக வழங்கினர். பின் அந்தத் தொழிற் கூடத்தில் அனைவரோடும் சேர்ந்து காலை உணவையும் அருந்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

5. கிறிஸ்தவர்களின் வாழ்விலும் குடும்பங்களிலும் இல்லங்களிலும் திருநற்கருணை மையமாக அமைவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும்நோக்கத்தில்2018ம்ஆண்டைதிருநற்கருணைஆண்டு என அறிவிப்பதற்குத் தீர்மானித்துள்ளது பாகிஸ்தான் தலத்திருஅவை. பாகிஸ்தான் ஆயர் பேரவையின் திருவழிபாட்டு ஆணைக்குழுவின் தலைவரான முல்டான் ஆயர் Benny Travas அவர்கள் இத்தகவலை

பீதேஸ் செய்தி நிறுவனத்திடம் அறிவித்தார். "நானே வாழ்வு தரும் உணவு" என்ற தலைப்பில் சிறப்பிக்கப்படும் திருநற்கருணை ஆண்டின் தொடக்க விழா வருகிற நவம்பர் 24 முதல் 26ம் நாள் வரை கராச்சி புனித பேட்ரிக் பேராலயத்தில் நடைபெறும். இவ்வாண்டின் நிறைவு நிகழ்வு 2018ம் ஆண்டு நவம்பர் 21ம் தேதி முதல் 24ம் தேதி வரை இலாகூரில் நடைபெறும். குடும்பங்கள், பள்ளிகள், இளையோர், சிறார் என எல்லாருக்கும் மறைக்கல்வி ஒவ்வொரு பங்கிலும் திருநற்கருணை ஆராதனை உட்பட பல திட்டங்கள் திருநற்கருணை ஆண்டில் செயல்படுத்தப்படும் எனக் கூறினார் ஆயர் Travas.

6. வன்முறையாளர்களின் குண்டுகளுக்குப் பலியான கவுரி இலங்கேஷ் (Gauri Lankesh) என்ற பெண் எழுத்தாளரின் வீரத்திற்கும் உண்மைக்கென அவர் அளித்த அர்ப்பணிப்பிற்கும் தலை வணங்குகிறோம் என்று இந்திய ஆயர் பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. செப்டம்பர் 5, இச்செவ்வாய் இரவு பெங்களூருவில் தன் இல்லத்திற்குத் திரும்பிவந்த வேளையில், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட கவுரி தியோடோர் மஸ்கரீனஸ் அவர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

7. அண்மைய ஆண்டுகளில் இந்தியாவில் அநீதிகளுக்கு குரல் கொடுத்த Kalburgi, Govind Pansare, Narendra Dabholkar ஆகிய எழுத்தாளர்களைத் தொடர்ந்து கவுரி இலங்கேஷ் அவர்களின் மரணம் நிகழ்ந்திருப்பது இந்நாட்டில் வெறுப்பின் அடிப்படையில் வளர்ந்துவரும் குற்றங்களுக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு என்று ஆயர்களின் அறிக்கைச் சுட்டிக்காட்டுகிறது. புகழ்பெற்ற கன்னட கவிஞர் இலங்கேஷ் அவர்களின் மகள் 55 வயதான கவுரி இலங்கேஷ் அவர்கள் குஜராத் கலவரம் கந்தமால் கலவரம் உட்பட இந்தியாவில் மதத்தின் பெயரால் நடைபெற்ற கலவரங்கள் குறித்தும் பேச்சுரிமைக்கு எதிராக நிகழ்ந்துள்ள வன்முறைகள் குறித்தும் அவர் நடத்தி வந்த Lankesh Patrike என்ற இதழில் துணிவுடன் எழுதி வந்தார்.

8. அன்னை தெரேசா இறையடி சேர்ந்ததன் 20ம் ஆண்டு மற்றும் புனிதராக அறிவிக்கப்பட்டதன் முதலாம் ஆண்டு ஆகியவற்றை நினைவுகூறும் விதமாக கோசொவோ நாட்டில் உள்ள பிரிஸ்டினா நகரில் புனித அன்னை தெரேசா திருத்தலம் புனிப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அன்னை தெரேசாவின் பிறந்த நாளான ஆகஸ்டு 26ம் தேதி அல்பேனிய மக்களால் துவக்கப்பட்ட இரு வாரக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இடம்பெற்ற இந்த கோவில் புனிதப்படுத்தும் கொண்டாட்டத்தில் திருத்தந்தையின் பிரதிநிதியாக கர்தினால் எர்னஸ்ட் சிமோனி அவர்கள் கலந்துக்கொண்டார்.

## சுடர் வாசகர் போட்டி - 39 சரியான விடைகள்

1. அன்னை மரியாவை
2. தூய கிறிஸ்தோஸ்தம் அருளப்பர்
3. தூய மத்தேயு
4. தூய வின்சென்ட் தே பவுல்
5. மத்தேயு
6. 30.9.420
7. ஆபத்தான கடல் பயணங்களை மேற்கொள்ளும் புலம் பெயர்ந்தோரை
8. செப்டம்பர் 5
9. "என்னையே அடிமையாக கருதி எனது இறப்பு வரை என்னை இறைப்பணிக்காக அர்ப்பணிப்பேன்"
10. உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும் (லூக்.2:35)
11. 1968 செப்டம்பர் 23
12. இரபேல்
13. தூய எரோணிமுஸ்
14. அருள் சகோதரி நகோத் (Nagothu)
15. திருத்தந்தை 2ஆம் ஜான் பால், 2002ல்

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

**திரு. ஜோசப், திருச்சி**

**சகோதரி. மெல்கியோர், கோவை**

**ரா. சங்கீதா, திருச்சி**

## சுடர் வாசகர் போட்டி - 40

1. அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி எந்த வயதில் இறையடி சேர்ந்தார்?
2. ஏஞ்சலோ கைசெப் தோன்கல்லியு இவரின் மறுபெயர் என்ன?
3. "மனிதரின் மீட்பே இறைவனின் மகிமை" என்ற இலக்கோடு தன் வாழ்வை அர்ப்பணித்த அருளாளர் யார்?
4. "நற்கருணை கிறிஸ்துவின் சதை நிலைவாழ்வின் மருந்து" கூறியது யார்?
5. இயேசுவைப் போல முகவடிவம் கொண்ட திருத்தூதர் யார்?
6. கவுரி இலங்கேஷ் நடத்தி வந்த இதழின் பெயர் என்ன?
7. கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு முதன்முதலில் குடில் அமைத்தவர் யார்?
8. செபமாலை அன்னை திருவிழா என்று அறிவித்த திருத்தந்தை யார்?
9. 30 ஆண்டுகள் படுக்கையிலேயே இருந்து தன் துன்பங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்த சலேசிய அருளாளர் யார்?
10. "தியோடஸ்" என்பதன் பொருள் என்ன?
11. இரக்கத்தின், பெண்களின், ஏழைகளின் நற்செய்தி என்று அழைக்கப்படும் நற்செய்தி எது?
12. தூய சீமோன் எவ்வாறு கொல்லப்பட்டார்?
13. "வாழும் விதிமுறை" என்று அழைக்கப்பட்ட சலேசிய அருளாளர் யார்?
14. தூய அன்னை தெரேசாவின் திருத்தலம் எந்த நாட்டில் கட்டப்பட்டுள்ளது?
15. திருத்தந்தை 9ம் பத்திநாதர் செபமாலையைப் பற்றி கூறுவதாக ஆசிரியர் கூறுவது என்ன?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை அக்டோபர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

அனைத்து புனிதர்கள் விழா
கல்லறைத் திருநாள்
தூய சார்லஸ் பொரோமியோ
பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு
லாத்ரன் பேராலய நேர்ந்தளிப்பு
பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு
தூய அலோசியஸ், கலிஸ்துஸ் கரவாரியோ
அருளாளர் மதலேனா மொரானோ
தூய பேதுரு, பவுல் ஆலயம் நேர்ந்தளிப்பு
பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு
கன்னிமரியா காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்
தூய செசிலியா கன்னியர்
தூய முதலாம் கிளமெண்ட் திருத்தந்தை
கிறிஸ்து அரசர் பெருவிழா
தூய அந்திரேயா திருத்தூதர்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

கல்லறை திருநாள் - தரும் பாடம்
தூய அலோசியஸ், கலிஸ்துஸ் கரவாரியோ - வாழ்வு தரும் பாடம்
யார் இந்தஅரசர்? கிறிஸ்து அரசர் விழா - ஒரு பார்வை
திருச்சபை செய்திகள்

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## அக்டோபர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ஞா | ஆண்டின் 26ம் ஞாயிறு | I. எசே 18:25-28<br>II. பிலி 2:1-11 | மத் 21:28-32 |
| 2 | தி | தூய காவல்தூதர்கள் | வி.ப. 23:20-23அ | மத் 18: 1-5,10 |
| 3 | செ | | செக் 8:20-23 | லூக் 9:51-56 |
| 4 | பு | தூய பிரான்சிஸ் அசிசியார் | நெகே 2: 1-8 | லூக் 9:57-62 |
| 5 | வி | | நெகே 8: 1-4அ, 5-6,7ஆ-12 | லூக் 10:1-12 |
| 6 | வெ | தூய புரூனோ | பாருக் 1: 15-22 | லூக் 10:13-16 |
| 7 | ச | தூய செபமாலை அன்னை | தி.ப. 1: 12-14 | லூக் 1:26-38 |
| 8 | ஞா | ஆண்டின் 27ம் ஞாயிறு | I. எசா 5: 1-17<br>II. பிலிப் 4: 6-9 | மத் 21: 33-43 |
| 9 | தி | தூய தெனிஸ் | யோனா 1: 1-17 | லூக் 10: 25-37 |
| 10 | செ | | யோனா 3: 1-10 | லூக் 10: 38-42 |
| 11 | பு | தூய திருத்தந்தை 23ம் ஜான் | யோனா 4: 1-11 | லூக் 11: 1-4 |
| 12 | வி | | மலாக் 3: 13-4:2அ | லூக் 11: 5-13 |
| 13 | வெ | | யோவேல் 1:12-15,2:12 | லூக் 11: 15-26 |
| 14 | ச | தூய முதலாம் கல்லிஸ்துஸ் | யோவே 3:12-21 | லூக் 11: 27-28 |
| 15 | ஞா | ஆண்டின் 28ம் ஞாயிறு | I. எசா 25:6-10அ<br>II. பிலிப் 4:12-14,19-21 | மத் 22: 1-14 |
| 16 | தி | தூய மார்கரேட் மரி அலகோக் | உரோ 1:1-7 | லூக் 11: 29-32 |
| 17 | செ | அந்தியோக்கு நகர் தூய இஞ்ஞாசியார் | உரோ 1:16-25 | லூக் 11: 37-41 |
| 18 | பு | தூய லூக்கா நற்செய்தியாளர் | 2திமொ 4:9-17 | லூக் 10: 1-9 |
| 19 | வி | சிலுவையின் புனித பவுல் | உரோ 3:21-30 | லூக் 11: 17-54 |
| 20 | வெ | | உரோ 4:1-8 | லூக் 12: 1-7 |
| 21 | ச | | உரோ 4:13,16-18 | லூக் 12: 8-21 |
| 22 | ஞா | ஆண்டின் 29ம் ஞாயிறு<br>(புனித திருத்தந்தை 2ம் ஜான் பால்) | I. எசா 45: 1,4-6<br>II. 1தெச 1:1-5அ | மத் 22: 15-21 |
| 23 | தி | தூய ஜான் கப்பிஸ்த்ரானோ | உரோ 4:20-25 | லூக் 12: 13-21 |
| 24 | செ | தூய அந்தோணி மரிய கிளாரெட் | உரோ 5:12,15ஆ,17-20ஆ-21 | லூக் 12: 35-38 |
| 25 | பு | | உரோ 6: 12-18 | லூக் 12: 39-48 |
| 26 | வி | | உரோ 6: 19-23 | லூக் 12: 49-53 |
| 27 | வெ | | உரோ 7: 18-25அ | லூக் 12: 54-59 |
| 28 | ச | புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் | எபேசி 2:19-22 | லூக் 6: 12-19 |
| 29 | ஞா | ஆண்டின் 30ம் ஞாயிறு | I. வி.ப 22:21-27<br>II. 1தெச 1:5இ-10 | மத் 22: 34-40 |
| 30 | தி | | உரோ 8: 12-17 | லூக் 13: 10-17 |
| 31 | செ | | உரோ 8:18-25 | லூக் 13: 18-21 |